இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 09.07.2026

# அடுத்தடுத்து சிக்கும் அமைச்சர்கள்!

**கரூரில் 41 பேர் பலியான சம்பவம் தொடர்பாக சி.பி.ஐ. வழக்கு, வருமான வரி வழக்குகள், செங்கல்பட்டு நீதிமன்றத்தில் கடுமையான குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்ட மணவிலக்கு வழக்கு - என பல்வேறு வழக்குகளில் சிக்கி இருப்பவர்தான் இன்றைய முதலமைச்சர் விஜய். அவரைப் போலவே அவரது அமைச்சர்கள் ஒவ்வொருவரும் அடுத்தடுத்து பல்வேறு வழக்குகளிலும் புகார்களிலும் சிக்கி வருகிறார்கள்.**

*** அமைச்சர் புஸ்ஸி ஆனந்த் :** கரூரில் 41 பேர் பலியான சம்பவத்தில் குற்றம் சாட்டப்பட்டவர் இவர். விஜய் வரும் நேரத்தை மாற்றிச் சொல்லி மக்களை முன்கூட்டியே வர வைத்தவர் இவர்தான். நிர்வாகிகள் நியமனம், வேட்பாளர் தேர்வு ஆகியவை குறித்து புகார் பெட்டி வைத்தாலே போதும் ஆனந்த் மீது ஏராளமான புகார்கள் குவியும். இந்த நிலைமையில், ஐந்து லட்சம் முதல் 30 லட்சம் ரூபாய் வரை லஞ்சம் பெற்றுக்கொண்டு, அரசு வழக்கறிஞர்களை நியமிப்பதாக அவர் மீது சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

விழுப்புரம் மாவட்டம் சாலாமேடு பகுதியைச் சேர்ந்தவரும், தமிழக வெற்றிக் கழகத்தின் வழக்கறிஞர் அணி இணை செயலாளருமான எம்.ஞானசௌந்தரி தாக்கல் செய்துள்ள வழக்கில், அரசு வழக்கறிஞர் நியமனத்துக்கு விண்ணப்பம் செய்வதற்கான கெடு ஜூன் 29ஆம் தேதி மாலை என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், அன்றைய தினம் பிற்பகலிலேயே நியமன பட்டியல் என வாட்ஸ் அப்பில் தகவல் பரவியதாகவும், இதுகுறித்து மாவட்டச் செயலாளரிடம் விசாரித்தபோது அதுதான் இறுதி பட்டியல் என கூறியதால் அதிர்ச்சி அடைந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

ஒரு அரசு வழக்கறிஞர் நியமனத்துக்கு 5 லட்சம் ரூபாய் முதல் 30 லட்சம் ரூபாய் வரை லஞ்சம் பெற்றுக்கொண்டு, அரசு வழக்கறிஞர்களாக நியமிக்கப்படுகின்றனர்; த.வெ.க. மாவட்டச் செயலாளர் மோகன்ராஜ் மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆகியோர் கூட்டுசேர்ந்தும், த.வெ.க. பொதுச் செயலாளரும், அமைச்சருமான புஸ்ஸி ஆனந்த் பரிந்துரை அடிப்படையிலும், இந்த நியமனங்கள் நடந்துள்ளதாக குற்றம்சாட்டியுள்ளார். இவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு முதல்வர் விஜய்க்கு இருப்பதாகவும் கூறியுள்ளார்.

எனவே அரசு வழக்கறிஞர் நியமனத்தில் தனக்கு வாய்ப்பளித்து நியமனங்கள் மேற்கொள்ள உத்தரவிடவும், அதுவரை அறிவிப்பாணைக்கு தடைவிதிக்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்துள்ளார். இதே மாதிரியான நியமனக் குற்றச்சாட்டுகள் வந்து கொண்டு இருக்கின்றன.

*** அமைச்சர் ஆதவ் அர்ஜூனா:** கரூரில் 41 பேர் பலியான சம்பவத்தில் பல நாட்கள் தலைமறைவாக இருந்தவர் இவர். கரூர் வழக்கை இப்போது சி.பி.ஐ. விசாரித்து வருகிறது. த.வெ.க. ஆட்சியில் குதிரை பேரம் நடப்பதாக உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம், தேர்தல் ஆணையம் ஆகிய இடங்களில் பல்வேறு புகார் மனுக்கள் பதிவாகி வருகிறது. இவை அனைத்திலும் சிக்கப் போகிறவர் இவர்தான். இவரது மனைவி மீது லாட்டரி தொடர்பான வழக்குகள் உள்ளன.

*** அமைச்சர் நிர்மல்குமார்:** கரூரில் 41 பேர் பலியான சம்பவத்தில் குற்றம் சாட்டப்பட்டவர் இவர். ‘கூட்டம் அதிகமாக இருக்கிறது, விஜய் வரத் தாமதமானால் அசம்பாவிதம் நடக்கும், எனவே அவரை சீக்கிரம் வரச் சொல்லுங்கள்’ என்று காவல் துறை அதிகாரிகள் சொன்னது இவரிடம்தான். இது முதல் தகவல் அறிக்கையிலேயே இருக்கிறது. குதிரை பேர வழக்குகளிலும் சிக்குவார்.

*** அமைச்சர் மரிய வில்சன்:** நிதி அமைச்சரான இவர், கட்டையைத் தூக்கி ஒரு குடும்பத்தைத் தாக்கும் வீடியோ இணைய தளத்தில் பரவி அனைவரும் பார்த்த காட்சிகள் ஆகும். மரிய வில்சனுக்கும் அவரது அண்ணன் மரிய குளோத்துக்கும் இடையே சொத்துப் பிரச்சினை இருந்துள்ளது. 8.8.2022 ஆம் நாள் புதுச்சேரியில் உள்ள மரிய குளோத்தின் வீட்டுக்குச் சென்று அவரையும் அவரது மனைவியையும் கட்டையை வைத்து தாக்கி இருக்கிறார் மரிய வில்சன். கதறக் கதற தாக்கி இருக்கிறார். வீட்டில் இருந்த பொருட்களையும் அடித்து உடைத்துள்ளார். கொலை மிரட்டல் விடுத்துள்ளார். இது தொடர்பாக லாஸ்பேட்டை காவல் நிலையத்தில் புகார் தரப்பட்டது. மரியவில்சன், அவரது அப்பா நெஸ்தோஸ் ஆகியோர் மீது ஆறு பிரிவுகளின் கீழ் வழக்கு பதியப்பட்டுள்ளது. மரியவில்சன், கடந்த 4 ஆம் தேதியன்று நீதிமன்றத்திற்கு நேரில் சென்றிருக்க வேண்டும். ஆனால் போகவில்லை. அவரை மீண்டும் 10 ஆம் தேதியன்று வரச் சொல்லி இருக்கிறது நீதிமன்றம்.

*** அமைச்சர் சரத்குமார்:** பொது இடத்தில் போதை மருந்தைப் பயன்படுத்தி மாட்டிக் கொண்டவர் இவர். ‘குழந்தைக்கு மாத்திரையை நசுக்கிக் கொடுத்தேன்’ என்பதை அந்தக் குழந்தை கூட ஏற்றுக் கொள்ளாது. இது மட்டுமல்ல, பல வீடியோக்கள் வந்து கொண்டு இருக்கிறது. இந்த வீடியோக்களை வெளியிட்டார் என்று சொல்லி சிலருக்கு கொலை மிரட்டல் விடுத்த புகாரும் பதிவாகி இருக்கிறது.

*** அமைச்சர் விஸ்வநாதன்:** விஜய் பிறந்த நாளை முன்னிட்டு மாரத்தான் ஓட்டம் நடைபெற்றுள்ளது. அதில் ஓடிய மாணவிகள் காலை நீட்டி உட்கார்ந்திருந்தபோது அருவெறுப்பாக நடந்து கொண்டுள்ளார் உயர் கல்வி அமைச்சர் விஸ்வநாதன். மாணவிகளது காலைத் தொட்டும், அவர்களது விரல்களுக்கு சொடுக்கு எடுத்தும் மிக மோசமாக நடந்து கொண்டார். இவை அனைத்தும் போக்சோ சட்டப்படி குற்றங்கள் ஆகும். இவர் மீது போக்சோ சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குழந்தைகள் நல அமைப்புகள் டெல்லி குழந்தைகள் ஆணையத்துக்கு புகார் அனுப்பி இருக்கின்றன. ஆளுநரிடம் பா.ஜ.க. நேரடியாக புகார் தந்துள்ளது.

**- இப்படி லஞ்சம், ஊழல், 41 பேர் மரணம், பாலியல், போக்சோ, போதை மருந்து, அடிதடிகள், தாக்குதல்கள், குதிரை பேரம் இப்படி தண்டனைச் சட்டத்தின் அனைத்து பிரிவுகளிலும் பல்வேறு வழக்குகளில் தூயசக்தி அமைச்சர்கள் துர்நாற்றம் அடிக்கும் வகையில் சிக்கி வருகிறார்கள்.**

---

### “உங்களை மைதானத்தில் மீண்டும் காண ஆவல்!”

# எம்.எஸ்.தோனிக்கு பிறந்த நாள் வாழ்த்துகள்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் - சமூக வலைதளத்தில் பதிவு!

**சென்னை, ஜூலை 9 -**

**‘உங்களை மைதானத்தில் மீண்டும் காண ஆவல்’ என்றும் இந்திய கிரிக்கெட் முன்னாள் கேப்டன் எம்.எஸ்.தோனிக்கு பிறந்த நாள் வாழ்த்துகள் என்றும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளப் பதிவில் தெரிவித்துள்ளார்.**

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்திய கிரிக்கெட் முன்னாள் கேப்டன் எம்.எஸ்.தோனியின் பிறந்த நாளையொட்டி வெளியிட்ட வாழ்த்துச் செய்தி வருமாறு:-



‘கேப்டன் கூல்’ எம்.எஸ்.தோனி அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துகள்.

விளையாட்டு மைதானத்தில் இருந்தாலும், வெளியே இருந்தாலும் உங்களின் நிதானம், தலைமைத்துவம் மற்றும் காலத்தால் மங்காத கவர்ச்சி இவைகள் கோடிக்கணக்கானவர்களுக்கு ஊக்கத்தை வழங்கி வருகின்றன.

உங்களை மீண்டும் விளையாட்டு தளத்தில் காணுகிற எதிர்பார்ப்பு இன்னும் மாறாத அதே உற்சாகத்துடன் இருக்கின்றது.

நீங்கள் நல்ல ஆரோக்கியத்துடனும், மகிழ்வாகவும் மேலும் பல்லாண்டு வெற்றிகளுடன் சிறக்கவும் வாழ்த்துகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

---

### ‘அரசுப் பள்ளியில் ஆய்வு’ என்ற பெயரில் – ‘ரீல்ஸ்’ மோகத்தில் பள்ளியில் நுழைந்து

# சமூகப் புரிதலின்றி குழந்தையிடம் அமைச்சர் கீர்த்தனா காட்டிய அராஜகச் செயல்!

## கழக மகளிரணி சமூக வலைதளப் பொறுப்பாளர் மரு.யாழினி கடும் கண்டனம்!

**சென்னை, ஜூலை 9-**

**அரசுப் பள்ளியில் ஆய்வு என்ற பெயரில் ரீல்ஸ் வெளியிட்டு மாணவியை அவமதித்த தொழில்துறை அமைச்சர் கீர்த்தனாவைக் கண்டித்து கழக மகளிரணி சமூக வலைதளப் பொறுப்பாளர் மரு.யாழினி பத்திரிகையாளர் சந்திப்பில் அமைச்சர் கீர்த்தனா செய்தது** Emotional Abuse & Harassment. **சமூக புரிதலில்லாமல் குழந்தையிடம் அராஜகம்,** Victim card **பிளே பண்ணாதீங்க, அந்த இடத்தில் அந்தக் குழந்தை தான்** Victim **என கண்டனம் தெரிவித்துள்ளார்.**

செய்தியாளர்களிடம் மரு.யாழினி கூறியதாவது :-



த.வெ.க. கட்சி ஆட்சிக்கு வருவதற்கு முன்பு தங்களின் பிரச்சாரத்திற்கு குழந்தைகளைப் பயன்படுத்தி பெற்றோர்களைப் பிளாக் மெயில் செய்து வாக்களிக்க வைத்தனர். தற்போதும் தாங்கள் செய்யும் குற்றங்களை மறைக்க குழந்தைகளைக் கேடயமாக பயன்படுத்தி வருகின்றனர். சமீபத்தில் தவெக அமைச்சர் சரத்குமார் அவர்கள் போதை பொருளை பயன்படுத்தியது போல ஒரு வீடியோ வெளியானது எதிர்ப்பு கிளம்பியதும் உடனடியாக அவரது குழந்தையை கேடயமாக்கி அதில் இருந்து தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறார். நிறைய தவெக நிர்வாகிகள் தொடர்ச்சியாக குழந்தைகளை இது போன்று எமோஷனலா அப்யூஸ் பண்ணிட்டு இருக்காங்க. இது மிகவும் கண்டிக்கத்தக்கது.

நேற்று அமைச்சர் கீர்த்தனா செய்ததும் அந்த மாதிரியான ஒரு ஹராஸ்மெண்ட்தான். அவங்க அரசு பள்ளிக்கு சென்று அவர்களின் கருத்தை நிரூபிப்பதற்காக எல்லோர் முன்பும் ஒரு மாணவியை அவமானப்படுத்தி இருக்காங்க. இது அமைச்சர் கீர்த்தனாவிற்கு அசிங்கமான செயலா இல்லையா.? அது தப்பாவே தெரியலையா அவங்களுக்கு.?

### சமூகப் புரிதல் இல்லாத அமைச்சர்!

நீங்க அந்த வீடியோ பார்த்தாலே தெரியும் அவங்க அரசு பள்ளி மாணவர்களுக்கு ஆங்கிலம் தெரியாது என்ற முன் முடிவுடன் அங்கு சென்றிருக்கிறார். அவர் சில ஆங்கில சொற்களுக்கு தமிழ் அர்த்தம் கேட்கிறார். அதற்கு அந்த குழந்தைகள் பதில் அளிக்கும் முன்பே மாணவர்களுக்கு தெரியவில்லை பார்த்தீங்களா என பேசுகிறார். ஆசிரியர் தெளிவாக மாணவர்களிடம் கேட்கும் போது அதற்கு சரியான தமிழ் அர்த்தம் கூறுகிறார்கள் மாணவர்கள்.

ஒரு மாணவி எழுந்து எவர்லாஸ்டிங்னா கடைசி வரைக்கும் என பதில் அளிக்கிறார். மாணவி பதில் அளித்ததும், நாம் கூறியதை மாணவிகள் பொய்யாக்கி விட்டனர் என அமைச்சர் பதறுகிறார். ஒரு நல்ல அமைச்சராக இருந்தால் மாணவி பதில் அளித்ததை ஊக்கப்படுத்தி இருக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக மாணவி பதில் அளித்ததை தனக்கு நேர்ந்த அவமானமாகக் கருதி உங்க அப்பா என்ன செய்கிறார் என அடுத்த கேள்வியைக் கேட்கிறார்.

ஒரு சமூக புரிதல் உள்ள யாரும் எந்த மாணவர்களிடமும் உடனடியாக அப்பா பற்றி கேட்க மாட்டார்கள். எத்தனையோ குழந்தைகள் அப்பா இன்றி பள்ளியில் படிக்கின்றனர். அப்பாவின் பணியை வெளியே சொல்ல அசௌகரியமாக நினைக்கும் குழந்தைகள் உள்ளனர். இப்படி கேள்வி கேட்பது அவர்களை உளவியல் ரீதியாக கடுமையாக பாதிக்கும். சமூக புரிதல் இன்றி இப்படி கேள்வி கேட்பது அபத்தமான ஒன்று.

### குழந்தையை மட்டம் தட்டிப் பேசும் அமைச்சர்!

இன்னொன்று அமைச்சரிடம் ஆரம்பத்தில் அந்த மாணவி நார்மலாக நின்று மிக தைரியமாக பேசிக்கொண்டு இருக்கிறார். ஆனால் அமைச்சரின் நடவடிக்கையால் அந்த குழந்தை பயந்து போய் கை கட்டி பேச ஆரம்பிக்கிறது. நம்ம திராவிட இயக்கத்தில் யார் முன்னாடியும் கை கட்டி நிக்க கூடாது என சொல்லிக் கொடுத்துள்ளோம். இவர்கள் பெரியாரை பெயரளவிற்கு கொள்கைத் தலைவராக வச்சிருக்காங்க ஆனா அந்த விவரம் எதுவுமே அவங்களுக்கு தெரியாது. அந்த குழந்தை பயந்து போய் நிற்கும் போது குழந்தையின் பயத்தை போக்கி இயல்பாக்க கூட அவர் முயற்சிக்கவில்லை. ஆனாலும் அந்த நேரத்தில் மறுபடியும் மறுபடியும் உனக்கு தெரியாது உனக்கு தெரியாது என்று மட்டம் தட்டும் எண்ணத்தோடு நடந்து கொண்டுள்ளார்.

இந்த சமூகத்தில் உனக்கு படிப்பு வராது படிப்பதற்கு தகுதி உனக்கு இல்லைன்னு சொல்லி படிக்க விடாம இருந்த இந்த சமூகத்துல படிப்பு எல்லாருக்குமானது என்ற கொள்கையை எடுத்து அதற்காக நூற்றாண்டு காலம் போராடி கல்வியை எல்லாரிடமும் கொண்டு போய் சேர்த்திருக்கோம். அப்படி இருக்கிற ஒரு சமூகத்தில் எந்தவிதமான வரலாறும் தெரியாது, என்னென்ன போராட்டங்கள் நடந்துச்சுன்னு எதுவுமே தெரியாம பள்ளிக்கு போய் குழந்தைகளை எல்லார் முன்னாடியும் மட்டம் தட்டி பேசுறீங்க அப்படின்னா உங்களோட நோக்கம் என்ன.?

நல்லா படிச்ச மேதாவிகளுக்கே நிறைய பேர் இருக்கிற இடத்துல பயம் ஏற்பட்டு சில வார்த்தைகள் அவங்களுக்கு மிஸ் ஆகதான் செய்யும் அதுக்குன்னு உடனே அவங்களுக்கு ஆங்கிலம் தெரியாது என்று சொல்ல முடியாது இல்லையா.? அந்த குழந்தைக்கும் அப்படி தான் ஆசிரியர் கேட்டவுடன் சரியான பதில் அளிக்கிறார். அதற்கு முன்பு வரை தைரியமாக பதில் அளித்து வந்தவர் உங்க அப்பா என்ன செய்யறாங்க என கேட்டவுடன் அதற்கு கூலித்தொழிலாளர் என சொல்லும் போது அவரது குரல் தளர்கிறது. அந்த இடத்தில அந்த குழந்தையை சைக்கலாஜிக்கலா அமைச்சர் எப்படி ட்ரமடைஸ் பண்ணி இருக்காங்க என்று இப்ப வரை அவர்களுக்கு புரியவில்லை.

### குழந்தைக்கு அமைச்சர் உருவாக்கிய பாதிப்பு!

இன்றுமே அவங்கள தற்காத்துக்க தான் பேசுறாங்க, அவங்களோட தற்பெருமையை மட்டும் தான் பேசுறாங்களே தவிர்த்து அந்த குழந்தை மேல அவங்க உருவாக்கின பாதிப்பு என்ன என அவங்க கொஞ்சம்கூட யோசிக்கவே இல்லை.

இன்னொரு முக்கியமான விஷயம் இரண்டு கேள்விக்கு குழந்தை பதில் சொல்லிய உடன் அமைச்சர் தனக்கு இன்சல்ட் ஆனதாக நினைத்து ‘இதே கேள்வியை கடைசி பெஞ்ச் மாணவர்களிடம் கேட்டால் தெரியாது’ என கூறுகிறார். கடைசி பெஞ்சில் இருக்கும் மாணவர்களுக்கு அது தெரியாது என இவர்களுக்கு எப்படி தெரியும்.? முதல் பெஞ்ச் கடைசி பெஞ்ச் என்ற பாகுபாடு எல்லாம் இருக்க கூடாது என கற்பித்தல் முறையிலேயே மாற்றம் கொண்டு வந்து இப்போது அனைவரும் நன்றாக படிக்கும் சூழலை உண்டாக்கி வருகிறோம். இப்போது வந்து கடைசி பெஞ்ச் மாணவர்களுக்கு தெரியாது அவர்கள் படிக்க மாட்டார்கள் என்பது போல பேசி மாணவர்களை மட்டம் தட்டுகிறார். கடந்த திமுக ஆட்சியின் போது பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் அவர்கள் இது மாதிரி ஒரு பள்ளிக்கு சென்றிருந்த போது அங்கு மாணவர்கள் மத்தியில் பேச தயங்கிய மாணவனை ஊக்கப்படுத்தி அவரது பயத்தை போக்கி பேசவைத்தார். அதன் பிறகு அந்த மாணவனும் அழகா பேசுவார்.

உனக்கு படிப்பு வராது நீ முட்டாள் உனக்கு எதுவுமே தெரியாதுன்னு சொல்றது இந்த தவெக அரசு. உன்னால முடியும் நாங்க இருக்கோம் என தட்டிக்கொடுத்து படிக்க வைத்தது திராவிட மாடல் அரசு.

ரீல்ஸ் மோகம் ரீல்ஸ் ஆட்சினு சொன்னா மட்டும் அவங்களுக்கு கோபம் வருது ஆனா ரீல்ஸ்னால தான் நேற்று மருத்துவர்கள் , செவிலியர்கள் போராட்டம் செஞ்சு இருக்காங்க. தவெக நிர்வாகிகள் ரீல்ஸ் எடுத்து இடையூறு செய்வதால் எங்க வேலையைப் பார்க்க முடியவில்லை என கூறி இந்த ரீல்ஸ் கலாச்சாரத்தை நிறுத்த சொல்லி போராட்டம் செஞ்சிருக்காங்க.

### ரீல்ஸ் போடுவதை த.வெ.க. நிறுத்த வேண்டும்!

தவெக நிர்வாகிகள் தொடர்ச்சியாக ஹாஸ்பிடல்ஸ், ஸ்கூல்ஸ் என்று அனைத்து இடங்களிலும் போய் ஆய்வு என்ற பெயரில் ரீல்ஸ் போட்டுட்டு இருக்காங்க. அவங்களுக்கு தைரியம் இருந்தால் கமிஷ்னர் ஆபீஸ்ல, கலெக்டர் ஆபீஸ்ல போய் ஆய்வு செய்து ரீல்ஸ் போடுங்களேன் பார்ப்போம். பள்ளிகள், மருத்துவமனைகளில் ரீல்ஸ் எடுத்து பதிவிடுவதை உடனே நிறுத்த வேண்டும்.

இப்போது அமைச்சர் கீர்த்தனா விக்டிம் கார்ட் பிளே பண்றாங்க இது எந்த விதமான மனநிலை அந்த இடத்தில் விக்டிம் அந்த குழந்தை தான். அந்த வீடியோவ அந்த குழந்தையின் பெற்றோர்கள், நண்பர்கள், உறவினர்கள் பார்த்து என்ன பேசுவாங்க நாளைக்கு அந்த குழந்தைக்கு என்ன கான்ஃபிடன்ஸ் இருக்கும். இந்த அரசால குழந்தைகளுக்கு கான்ஃபிடன்ஸ் பில்ட் பண்ண முடியலனா கூட பரவாயில்லை ஆனால் நாங்க கஷ்டப்பட்டு பில்ட் பண்ணி வச்சிருக்க அந்த கான்பிடன்ஸ தயவு செஞ்சு உடைக்காதீங்க.

தி.மு.க. ஆட்சியின் போது பள்ளிக் குழந்தைகளை பல்வேறு வகையில் ஊக்கப்படுத்தினோம். எண்ணும் எழுத்தும், இல்லம் தேடி கல்வி, மாடல் ஸ்கூல்ஸ்னு அத்தனை திட்டங்கள் கொண்டு வந்து மாணவர்களின் லிட்ரசிய இம்ப்ரூவ் பண்ணி இருக்கோம். அவங்களை என்கரேஜ் செய்யனும் என்று கல்வியில் சிறந்த தமிழ்நாடு என்ற ஒரு விழாவை எடுத்து அவங்களைப் பெருமைப்படுத்தினோம். ஜாப்பனீஸ், பிரெஞ்சு, கொரியன் எல்லா லாங்குவேஜ்லயும் பேச வச்சிருக்கோம். அவர்களை கல்வி சுற்றுலாவிற்காக வெளிநாடு அழைத்து சென்றோம். அப்படி கொஞ்சம் கொஞ்சமாக உருவாக்கின அந்த குழந்தைகளோட கான்ஃபிடன்ஸ தயவு செஞ்சு உடைச்சிராதீங்க. உங்க துறையில கவனம் செலுத்துங்க. ஆட்சிக்கு வந்து 50 நாள் ஆயிடுச்சு. இதுவரை என்ன இன்வெஸ்ட்மெண்ட் இங்க கொண்டு வந்திருக்காங்க என்ற தகவல் இல்லை.

### கல்வி வளர்ச்சிக்குப் பாடுபட்ட தி.மு.க. அரசு!

கடந்த ஆட்சியில் தொழில் தொடங்க பணம் கேட்கபட்டது என புகார் சொன்னதற்கு ஆதராம் எங்கே என கேட்டபோது என் ட்வீட்ல ஒருத்தர் கூறினார் அதை ரீடிவிட் செய்துள்ளேன் பாருங்க என சொல்லும் அளவு நாலேஜ் வச்சிருக்க மினிஸ்டர் எப்படி எங்க ஸ்டூடண்ட்ஸ பார்த்து இந்த மாதிரியான கேள்வி கேட்கலாம். குழந்தைகளை பார்த்து கேட்கறது ஹீரோயிசம்னு நினைச்சுட்டு இருக்கீங்க. அது ஹீரோயிசம் கிடையாது. 2000 கோடி கல்வி நிதி கொடுக்கலனாலும் எங்க குழந்தைகளோட கல்வியை நாங்க பார்த்துப்போம். அவங்களுக்கான திட்டங்களை நாங்க கொண்டு வருவோம்னு சொல்லி குழந்தைகளுக்காக தொடர்ச்சியான திட்டங்களைக் கொண்டு வந்து ஒன்றிய அரசை எதிர்த்து போராடுனார் எங்க கழக தலைவர் அவர்தான் ஹீரோ. ஹீரோயிசம் ரீல்ஸ்ல இல்ல. நிஜமா நீங்க இறங்கி மக்கள் சேவை பண்ணுறது தான் ஹீரோயிசம். சூட்டிங் எல்லாம் பிறகு பார்த்துக்கலாம். குழந்தைகளை தயவு செய்து இந்த மாதிரி ரீல்ஸ்களில் இருந்து கீப் தெம் அவுட்.

இவ்வாறு மரு.யாழினி குறிப்பிட்டார்.